# 39

# தேவனுடைய அருளிரக்கம்

## (ரோமர் 8:28)

*அதிகம் கவலையை அனுபவத்திருந்த தேவபக்தியுள்ள முதிர்வயதான பெண்ணாகிய ஒரு பரிசுத்தவாளியினிடத்தில், அவள் எப்போதாவது முறையிட வேண்டும்போல் உணர்ந்தது உண்டா என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்தப் பெண்மணி, "நான் அவ்வாறு உணரும்போது, என்னைச் சாய்வு நாற்காலியில்[1] உட்காரச்செய்து அமைதியாகக் காத்துக்கொள்ளும்படி மாத்திரம் கர்த்தரிடத்தில் கேட்கிறேன்" என்று பதில் அளித்தார். கேள்வி கேட்டவர் சுற்றுமுற்றும் கண்ணோக்கினார், அவரால் சாய்வுநாற்காலி எதையும் காண இயலவில்லை, எனவே அவர் அந்தப் பெண்மணி எதை அர்த்தப்படுத்தினார் என்று கேட்டார். அந்தப் பெண்மணி, "ரோமர் 8:28தான் எனது சாய்வுநாற்காலியாகும்: 'தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது' " என்று பதில் அளித்தார்.[2]*

## அத்தியாவசியமான ஒரு அருளிரக்கம்

**இது என்ன**

இது அருளிரக்கத்தின் மீதான ஒரு பாடமாக உள்ளது. "அருளிரக்கம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் அடிக்கடி காணப்படுவதில்லை (இது நடபடிகள் 24:2ல் தற்செயலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது), ஆனால் தெய்வீக அருளிரக்கத்தின் கருத்து வேதாகமம் என்ற புத்தகத்தில் ஊடுருவிப் பரவியிருக்கிறது.

"அருளிரக்கம்" என்ற ஆங்கில வார்த்தை, இரண்டு லத்தீன் சொற்றொடர்களிலிருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. முதலாவது *pro* என்பதாகும். இன்றைய நாட்களில் நாம், "professional" என்ற வார்த்தையைச் சுருக்கமாக "pro"என்கிறோம் அல்லது நாம் "pro" ["சாதகம்"] மற்றும் "con" ["பாதகம்"] பற்றிப் பேசுகிறோம், இதில் "pro" என்பது "க்காக" என்ற அர்த்தம் கொண்டுள்ளது. இந்த விளக்கங்களில் எதுவும் "providence" ["அருளிரக்கம்"] என்பதில் உள்ள pro வின் அர்த்தத்தை விளக்கப்படுத்துவதில்லை. "Pro" என்பதற்குப் பதில் "pre"என்பதை நினைத்துப் பாருங்கள்: அது *before* [முன்னால்] என்பதாக உள்ளது. இரண்டாவது லத்தீன் சொற்றொடர் *vid* என்பதாகும். *"Video"* என்பதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: அது *காணப்படுகிற* ஒன்று. இவ்விரு சொற்றொடர்களும் "providence" என்ற வார்த்தையில் ஒன்றிணைக்கப்படும்போது, அவைகள், நமக்கு என்ன தேவை என்பதை அது நமக்குத் தேவைப்படும் *முன்பே* தேவன் அதைக் *கண்ணோக்குதல்* - மற்றும் அந்தத் தேவையை *அருளிரக்கமாய் நிறைவேற்றுதல்* என்பதைக் குறிக்கின்றன. ("Provide," "provision," மற்றும் "providence" என்பவை ஒனறுக்கொன்று தொடர்புடையவைகள் ஆகும்.)

“எனது தேவைகளைக் காலத்திற்கு முன்பே காணுதல் தேவனுக்கு எவ்வாறு சாத்தியமாகிறது?”[3] என்று நீங்கள் கேட்கலாம். கிளே பிரையண்ட்[4] என்பவர், தேவன் நம்முடையதிலிருந்து “மாறுபட்ட கால மண்டலம் ஒன்றில்” வாழ்கிறார் என்று கூறினார். ஆக்லஹாமா நகரிலுள்ள மக்கள் CST - மைய தரமான கால - அளவையில் வாழ்கின்றனர், ஆனால் கிளே என்பவர், தேவன் “DST” என்ற தர அளவையில் - அதாவது “தெய்வீகக் கால அளவைதரத்தில்” - வாழ்கிறார் என்று கருத்துத் தெரிவித்தார். அந்த “கால மண்டலத்தில்” கடந்த, நிகழ் மற்றும் எதிர்காலம் என்ற யாவும் ஒன்றாக உள்ளது. நான் இதைப் புரிந்துகொள்கிறேனா? இல்லை, ஆனால் விசுவாசத்தினால் நான், நமது தேவைகளைத் தேவன் ஏதோ ஒரு வகையில் முன்னெதிர்பார்க்க முடிகிறது என்றும் அந்தத் தேவைகள் நிலவுமுன்பே அவற்றிற்கு அளிப்பு ஏற்படுத்துகிறார் என்றும் நான் அறிகிறேன்.

தேவன் தமக்குச் சொந்தமானவர்களுக்கு விசேஷித்த வகையில் அளிப்புகள் ஏற்படுத்துகிறார் என்று வேதவசனங்கள் சாட்சியளிக்கின்றன. இந்த சத்தியத்திலிருந்து நான் இரு முடிவுகளைத் தரவழைக்கிறேன். முதலாவது, தேவன் இன்றைய நாட்களில் நமது உலகத்தில் செயல்முனைப்புடன் இருக்கிறார், அவர் இந்த உலகத்தைப் படைத்துவிட்டு அதை அப்படியே விட்டுச்சென்று விடவில்லை. இரண்டாவது, தேவன் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்படி வாழ்வின் விஷயங்களை *முறைப்படுத்துகிறார்!*

**இதை நான் ஏன் நம்புகிறேன்**

தேவனுடைய அருளிரக்கத்தை நான் நம்புவதற்குப் பல காரணங்களை என்னால் தரமுடியும். எடுத்துக்காட்டாக, இது *நியாயமானதாக* உள்ளது என்பதால் நான் இதை நம்புகிறேன் என்று என்னால் கூற முடியும். இந்த உலகத்தை மனிதகுலத்தின் வாசஸ்தலமாகத் தேவன் படைத்தார். பின்பு அவர் தமது படைப்பின் சாதனைகளுக்குக் கிரீடமாக ஆணையும் பெண்ணையும் படைத்தார். அவர் மிருகங்களின் உலகம், தாவர உலகம் மற்றும் தாதுப்பொருட்களின் உலகத்தை மனிதகுலத்தின் ஆளுகையின்கீழ் வைத்தார். இவ்வளவு இடர்ப்பாடுகளினூடே கடந்து சென்ற பின்பு, அவர் தமது படைப்பை அப்படியே விட்டு அதைக் காணாதிருத்தல் என்பது ஏன் நிகழ வேண்டும்? ஒரு குழந்தைக்குத் தகப்பனான ஒரு மனிதன் அந்தக் குழந்தையின் தொடர்ந்த தேவைகள் பற்றிய சிந்தனை எதுவுமின்றி அதைக் கைவிட்டுவிடுதல் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அவர் தகப்பன் என்ற அளவில் தோல்வியடைந்தார் என்று நீங்கள் கருதுவீர்கள் அல்லவா? தேவன் தோல்வியாளர் அல்ல. அவர் நம்மைப் படைத்தது மாத்திரமின்றி, நம்மைத் தொடர்ந்து பராமரித்து நமது தேவைகளுக்கு அளிப்புகள் ஏற்படுத்துகிறார். இவ்வாறாக, தேவனுடைய அருளிரக்கம் என்பது கருத்தறிவை ஏற்படுத்துவதால் அதை நான் நம்புகிறேன் என்று கூறமுடியும்.

இருப்பினும், நான் மனித தர்க்கவாதத்தை மாத்திரம் சார்ந்திருக்கத் தேவையில்லை என்பதால் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். தர்க்கவாதம் என்பது தவறாக இருக்கக்கூடும். தேவன் தமக்குச் சொந்தமானவர்களுக்கு விசேஷித்த அளிப்புகளை ஏற்படுத்துகிறார் என்பதை வேதாகமத்தில் பல *உதாரணங்கள்* செயல்விளக்கப்படுத்துகின்றன என்பது எனது நம்பிக்கைக்கு மிக முக்கியமான காரணமாக உள்ளது. J. W. மெக்கார்வி[5] என்பவர் எழுதிய

பிரசங்கங்களின் புத்தகம், பழைய ஏற்பாட்டு வரலாறுகளின் அடிப்படையில் அமைந்ததான, "தெய்வீக அருளிரக்கம்" என்பதன்மீதான இரண்டு பாடங்களை உள்ளடக்கி இருக்கிறது. ஒன்று யோசேப்பின் வரலாறு ஆகும். வேதாகமரீதி யான அந்த வரலாற்று விவரங்களின் முடிவுப்பகுதிக்கு அண்மையில், யோசேப்பு தமக்கு நேர்ந்த யாவற்றிலும் கடைசியில் தேவனுடைய கரத்தைக் கண்டார். அவர் தமது சகோதர்களிடம் பின்வருமாறு கூறினார்:

> பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் *தேவன்* என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, *தேவனே* என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோ னுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார் (ஆதியாகமம் 45:7, 8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

எஸ்தரின் வரலாறு என்பது இரண்டாவதாக உள்ளது - இதில் எஸ்தரின் சிற்றப்பாவான மொர்தெகாய் என்பவர் அவளிடத்தில், "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?" என்று கூறினார் (எஸ்தர் 4:14).

தெய்வீக அருளிரக்கத்தை நான் நம்புவதற்கு இன்னும் ஒரு காரணம் உள்ளது, அது இவையாவற்றிலும் மிக முக்கியமானதாக உள்ளது: தேவனுடைய ஏவுதல் பெற்ற *வாக்குத்தத்தங்கள்.* நாம் வேதாகமத்தினுடைய பலபக்கங்களைத் திருப்பி, தேவனுடைய அன்பையும் நம்மீது அவர் கொண்டுள்ள அக்கறையையும் பற்றிப் பேசமுடியும்.[6] எடுத்துக்காட்டாக யாக்கோபு 1:17, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாக, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" என்று கூறுகிறது. பின்வரும் நன்கு பழக்கமான வார்த்தைகளின் மறைமுகக் கருத்துக்களையும் நாம் ஆழ்ந்து சிந்திக்கலாம். "தேவன் ... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இருப்பினும் பலருக்கு, ரோமர் 8:28 இந்தப் பாடக்கருத்தின்மீது மிகவும் பிரியமான வசனமாக உள்ளது: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

## மன எழுச்சியூட்டும் ஒரு வாக்குத்தத்தம்

KJV வேதாகமத்தில், "all things work together for good" என்றிருக்கையில், NASB வேதாகமத்தில் "*God* causes all things to work together for good" என்றுள்ளது. "தேவன்" என்ற வார்த்தை இவ்வேத வசனப்பகுதியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்மில் பெரும்பான்மையானவர்கள், வாழ்வில் நிகழ்வுகள் தாமாகவே "நன்மைக்கு ஏதுவாக நடப்பது" இல்லை என்பதைப் புரிந்து உணர்ந் திருக்கிறோம். *தேவனுடைய* கரம் ஈடுபட்டுள்ளது என்பது தெளிவு. தேவன் நமக்கு என்ன செய்கிறார் என்பதை அதிக முழுமையாக மதித்துணர்வதற்கு நாம், மன எழுச்சியூட்டும் இவ்வேத வசனத்தை இன்னும் நெருங்கிக் கண்ணோக்கு வோமாக.

**நிச்சயமான ஒரு கூற்று**

முதலாவதாக நாம் ரோமர் 8:28 ஒரு நிச்சயமான கூற்றாக இருப்பதைக் காண்கிறோம். இதில் பவுல், *"அறிந்திருக்கிறோம்"* என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அப்போஸ்தலர் தமது நிச்சயத்தை, "நான் அறிந்திருக்கிறேன்" (2 தீமோத்தேயு 1:12ஐக் காணவும்) அல்லது "நாம் அறிந்திருக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:1ஐக் காணவும்) என்று கூறியதன்மூலம் அடிக்கடி வெளிப்படுத்தினார். ரோமர் 8:28ல் அவர் இதே வகையான நிச்சயத்தைத் தெரியப்படுத்துகிறார். பாட்செல் பாரெட் பாக்ஸ்ட்டர் என்பவர் பின்வருமாறு கூறினார்,

> சில மனிதர்கள் இவ்வசனத்தைப் பற்றி, "இது உண்மையாக இருக்க முடியுமா?" என்று கேட்பார்கள். மற்றவர்கள் "இது உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கூறுவார்கள். இன்னும் மற்றவர்கள் "இது உண்மையாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன்" என்று கூறுவார்கள். ஆனால் பவுல் இவ்வசனத்தில், "நாம் அறிந்திருக்கிறோம்" என்று கூறுவதைக் கவனியுங்கள். இது ஒரு நம்பிக்கை அல்லது விருப்பம் அல்லது சாத்தியக்கூறு என்பதாக மாத்திரம் இருப்பதில்லை, ஏனெனில் பவுல், "நாம் *அறிந்திருக்கிறோம்*" என்று கூறுகிறார்.[7]

**யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு கூற்று**

நமது வேதபாட வசனம், *யாவற்றையும் உள்ளடக்கிய* ஒரு கூற்றாக உள்ளது என்றும் நாம் காண்கிறோம்: "... *சகலமும்* நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." நம்மில் பெரும்பான்மையானவர்கள், வேதாகமத்தில் "சகலமும்" என்பது எப்போதுமே, இருப்பில் உள்ள *"ஒவ்வொன்றையும்"* அர்த்தப்படுத்துவதில்லை என்பதைப் புரிந்துகொள்கிறோம் (1 கொரிந்தியர் 13:7; 3:21; 2 கொரிந்தியர் 5:18ஐக் காணவும்). இவ்வேதபாட வசனப்பகுதி நம்மைப் *பாவம்* செய்யும்படி ஊக்குவிப்பதில்லை என்றும் இது *பாவம்நிறைந்த தன்மை* நமக்கு நல்லதாக இருக்கும் எனப் போதிப்பதில்லை என்றும்கூடப் புரிந்துகொண்டுள்ளோம் (1 கொரிந்தியர் 15:34; 1 யோவான் 2:1; எபேசியர் 4:26ஐக் காணவும்).[8] வாழ்வில் நமக்கு நடக்கிற - நல்ல அல்லது மோசமான - விஷயங்கள் ஒவ்வொன்றும் நிறைவாக நன்மை கொண்டுவரும்படி தேவனால் அவற்றைப் *பயன்படுத்த முடியும்* என்றே இவ்வசனப்பகுதி கூறுகிறது. இதன் சந்தர்ப்பப்பொருளானது, தேவன் நம்மீது அன்புகூருவதால் இதைச் செய்கிறார் என்று வலியுறுத்துகிறது:

> இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளா திருப்பதெப்படி? ... கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச்

*சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித் திருக்கிறேன் (ரோமர் 8:31-39).*

**ஒருங்கிணைக்கும் ஒரு கூற்று**

அடுத்ததாக நான் நமது வேதபாடவசனப்பகுதியானது, *ஒருங்கிணைக்கும்* ஒரு கூற்றாக உள்ளது - அதாவது, இது "ஒன்றிணைந்து செயல்படும்" விஷயங் களைப் பற்றிப் பேசுகிறது - என்று கருத்துத் தெரிவிக்கிறேன்: "... சகலமும் நன்மைக்கு *ஏதுவாக நடக்கிறதென்று* அறிந்திருக்கிறோம்." எல்லா விஷயங்களும் நல்லவைகள் அல்ல, ஆனால் அவைகள் "நன்மைக்கு *ஏதுவாக நடக்கிறது.*"

ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில், எனது மனைவியும் நானும் அர்க்கன்சாஸிலிருந்து ஆக்லஹாமாவுக்குப் பயணம் சென்று கொண்டிருந்தோம். மாலை ஆராதனை ஊழியத்தின் வேளையில் நாங்கள் ஆக்லஹாமாவின் ஹென்றி யெட்டா என்ற இடத்திற்கருகில் இருக்கக் கண்டோம், எனவே ஆராதனைக்காக நாங்கள் அங்கே நின்றோம். சில ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு அறிமுகமாயிருந்த ரெட் கோல்மேன் என்ற இளைஞர் அங்கு சுவிசேஷக்கூட்டத்தில் பிரசங்கித்தார். அந்த இரவில் அவர் ரோமர் 8:28ஐ வேதபாட வசனமாகப் பயன்படுத்தி, அதை ஆர்வமிக்க வகையில் விவரித்தார். அரங்கத்தின் முன்வரிசையில் குழந்தைகளின் குழு ஒன்றை குறுக்காக நிற்கவைத்தார். முதல் குழந்தையிடம் அவர் ஒரு மாவுடப்பாவைக் கொடுத்து அந்த மாவைச் சுவைத்துப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். அவன் அதைச் செய்தபோது, அதன் ருசி நன்றாக இல்லை என்பது போன்ற முகக்குறிப்பை அவன் காண்பித்தான். இரண்டாவது குழந்தையிடம் ரெட், வெண்ணெய் டின் ஒன்றைக் கொடுத்தார், செய்முறை திரும்ப நிகழ்த்தப்பட்டது. அவர் அதே செயலை உப்பு, பேக்கிங் சோடாத்தூள், பல்வேறு மாவுகள், பால், சர்க்கரை மற்றும் கேக் செய்ய உதவும் பிற பொருட்கள் ஆகியவற்றைக் கொடுத்துச் செய்தார். பாலும் சர்க்கரையும் குழந்தைகளின் அங்கீகாரத்தைப் பெற்றன, ஆனால் மற்ற பொருட்களின் சுவையை பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. பின்பு ரெட், எல்லா டப்பாக்களையும் எடுத்து, அவற்றில் உள்ளவற்றை ஒரு கோப்பையில் கொட்டி, அவற்றை ஒன்று கலந்துகொண்டே, "மோசமான" மற்றும் "நல்ல" என்ற "சகலமும் ஒன்றாக நடப்பித்தல்" பற்றிப் பேசினார். இந்த வேளையில் அவர் கேக் ஒன்றைச் செய்தார் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அறிந்தனர். அவர் பிரசங்கமேடைக்குப் பின்னால் சென்று, [கோப்பையில் ஒன்று கலக்கப்பட்ட] அதே பொருட்களைக் கொண்டு ஏற்கனவே சமைக்கப்பட்டிருந்த கேக் ஒன்றை வெளியே எடுத்து, அதைத் தமது இளம் உதவியாளர்களுடன் பகிர்ந்துகொண்டார். எல்லாப் பொருட்களும் "ஒன்றாகச் செயல்பட்ட"போது, அவைகள் "நன்மைக்கு" ஏதுவாகத் திரும்பியதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்!

"சகலமும் ஒன்றுகூடி" நன்மையான முடிவைத் தரும் விஷயங்களுக்குப் பல உதாரணங்கள் தரப்பட முடியும். மெக்கார்வி என்பவர் எஸ்தர் பற்றிய தமது பிரசங்கத்தில், சிகாகோவின் மாபெரும் கண்காட்சியில் தாம் கண்ட நெசவு இயந்திரத்தின் விவரிப்பைப் பயன்படுத்தினார். மனிதக்கரம் எதுவும் காணப்படவில்லை. தறிநாடாக்கள் பறந்துகொண்டிருந்தன, நூல்கள் பின்னி முறுக்கிக் கொண்டிருந்தன, இயந்திரமானது ஒலியெழுப்பிக்கொண்டிருந்தது,

மற்றும் அழகிய முறையில் நெய்யப்பட்ட பட்டுத்துணி அந்த இயந்திரத்திலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தது. மெக்கார்வியின் முடிவுரையை பொழிப்புரையாகத் தர என்னை அனுமதியுங்கள்: "நெய்யப்பட்ட இந்த நூல் தொகுதி தற்செயலினால் நடந்தது என்று நம்பும்படி எவரொருவரும் என்னை இணங்கச் செய்ய இயலாது, மற்றும் எஸ்தரின் வரலாறும் தற்செயலாக நடந்தது என்றோ அல்லது நமது வாழ்வும் தற்செயலாகச் செயல்படுகிறது என்றோ நம்பும்படி எவரொருவரும் என்னை இணங்கச் செய்ய இயலாது. மனிதர்களின் வாழ்வில் தேவன் ஆளுகை செய்கிறார்!"[9]

தேவன் இந்த உலகத்திலும் நமது வாழ்விலும் நமது நன்மைக்காகச் செயல்படுகிறார். நாம் சோதனைகளையும் உபத்திரவங்களையும் கொண்டிருக்கலாம், ஆனால் அவரது உதவியுடன் முடிவில் நாம் வெற்றிகொண்டிருப்போம் என்று உறுதியாயிருக்க முடியும். நாம் ஏற்கனவே 37ம் வசனத்தை வாசித்திருக்கிறோம், அதில் பவுல், "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" என்று கூறினார்.

**ஆறுதல் அளிக்கும் ஒரு கூற்று**

நமது வேதபாட வசனப்பகுதி *ஆறுதல் அளிக்கும்* கூற்றாகவும் உள்ளது: "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் *நன்மைக்கு* ஏதுவாக நடக்கிறது." வாழ்வு நமக்கு எதைக் கொண்டுவந்தாலும், நாம் பின்வரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருக்க முடியும்: தேவன்மீதுள்ள நமது விசுவாசத்தை நாம் பராமரித்திருந்தால், முடிவில் நன்மை விளையும் என்பதை அவர் உறுதிப்படுத்துவார்.

சிலர் இதை நம்புவதற்குக் கடினமானதாகக் காண்கின்றனர். அவர்கள் - வியாதி, ஏழ்மை மற்றும் நண்பர்களை இழத்தல் உள்ளிட்ட - பிரச்சனைகளுடன் போராடும் நீதிமானையும், அதேவேளையில் வளம்பெறும் அநீதியான மனிதர்களையும் கண்ணோக்குகின்றனர். அவர்கள், "நமது கண்களின் சாட்சியங்கள் அருளிரக்கமான அளிப்பிற்கு எதிரானவைகளாக இருக்கும்போது, நாம் எப்படி அருளிரக்கத்தை நம்ப முடியும்?" என்று கேட்கின்றனர். இந்தக் கேள்விக்குப் பல பதில்கள் உள்ளன, ஆனால் நான், "நன்மை" என்ற வார்த்தைக்கான நமது விளக்கத்தின்மீது கவனம்குவிக்க விரும்புகிறேன்.

இந்த உலகம் நமது இல்லமாக உள்ளது என்ற சிந்தனையினால் ஏமாற்றப்படுதல் சுலபமாயுள்ளது. அது நடக்கும்போது - மதிப்பு, செல்வங்கள், சந்தோஷம், பிரபலமாகுதல் மற்றும் நல்ல உடல்நலம் என்பவை போன்ற - பூமிக்குரிய விஷயங்களே உண்மையில் பொருட்படுத்தப்பட வேண்டியவை என்று நாம் நினைக்கிறோம். நாம் அந்த முடிவை அடைந்தால், நாம் தவறான அளவுகோல் கொண்டு அளப்பவர்களாக இருக்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்னர், நான் கிரேட்டர் ஆக்லஹாமா நகரத்தின் கிராம சபை ஒன்றிற்குப் பிரசங்கிக்கத் தொடங்கியபோது (பிரசங்கித்தல் சிலவற்றைச் செய்திருந்த எங்கள் உறுப்பினர்களில் ஒருவரான) ஏர்ல் மாத்யூஸ் என்பவர், மக்களைக் கர்த்தர் இந்தப் பூமியில் வைத்தது ஏன் என்று எனக்குத் தெரியுமா என்று கேட்டார். இது அதற்கு முன்னால் நான் ஆழ்ந்து சிந்தித்திராத ஒரு கேள்வியாக இருந்தது. ஏர்ல் இந்தப் பாடக்கருத்தின்மீது

பல வசனப்பகுதிகளைப் பகிர்ந்துகொண்டார், அவற்றில் பலவற்றை, அவர் எனக்குப் போதித்த பாடத்தை நான் மறக்காதிருக்கும்படி எனது வேதாகமத்தின் முதற்பக்கத்தில் எழுதி வைத்துக்கொண்டேன்.

> என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன் (சங்கீதம் 86:12).

> காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள் ... (பிரசங்கி 12:13).

> "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16).

> "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" (வெளிப்படுத்தின விசேஷம் 4:11).

வாழ்வில் நமது நோக்கம் இருமடங்கானதாக உள்ளது: (1) தேவனை மகிமைப்படுத்துதல் மற்றும் (2) நித்தியம் முழுவதிலும் தேவனுடன் இருக்கச் செல்வதற்கு ஆயத்தமாகுதல். இவ்விரு இலக்குகளும் தேவனைப்போல் அதிகமாயிருக்க கடினமாய் முயற்சித்தலை உள்ளடக்கி இருக்கின்றன. விஷயம் அப்படி இருப்பதால், *தேவனைவிட்டு நம்மைப் புறம்பே எடுத்துப்போடுகிற எதுவும் "பொல்லாங்கானதாகவும்" தேவனிடத்தில் நம்மை நெருங்கிச் சேர்க்கிற எதுவும் "நல்லதாகவும்" உள்ளது.*

இந்த உட்கண்ணோக்கை நமது அளவுகோலாகப் பயன்படுத்துதலானது நமக்கு நடைபெறுபவை பற்றி ஒரு மாறுபட்ட கருத்து நோக்கத்தை வைக்கிறது. எடுத்துக்காட்டாக, இந்த உலகத்தின் நிந்தனைகள் அதன் முகஸ்துதியைக் காட்டிலும் நமக்கு மேன்மையானதாக இருக்கலாம். பொருளாதாய ஆசீர்வாதங்கள் சில தனிநபர்களைத் தேவனிடத்தில் நெருங்கிச் சேர்ப்பதில்லை, ஆனால் அவை அதற்குத் தடையாக உள்ளன. இயேசு, "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று எச்சரித்தார் (லூக்கா 12:15). கர்த்தர், "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு (19:24).

இதே கொள்கையானது வாழ்வின் பல துறைகளுக்கும் உண்மையாக உள்ளது. நோய்வாய்ப்படுதல்கூட உடல்நலத்தைக் காட்டிலும் மேன்மையான வகையில் நமக்குப் பயன்படலாம். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் உடல்நலம் குன்றுதலை அல்லது நமது உடலைப் பராமரிக்கத் தவறுதலைத் தேடவேண்டும் என்று நான் நிச்சயமாகக் கூறவில்லை; அது 1 கொரிந்

தியர் 3:16, 17 மற்றும் 6:19, 20ன் போதனைக்கு நேர்மாறானதாக இருக்கும். மாறாக, நமது எண்ணப்போக்குகள் சரியானவைகளாக இருந்தால், உடல் நலக்குறைவைக்கூடத் தேவன் நமது நன்மைக்கு ஏதுவாக்கக்கூடும் என்றே நான் கூறுகிறேன். நோயின் உபத்திரவப் படுக்கையில் நேரத்தைச் செலவிடும் ஒரு ஆண் அல்லது பெண், விஷயங்களைத் தெளிவான ஒரு வெளிச்சத்தில் அடிக்கடி காண்கிறார். எனது வாழ்வில் பலமுறை, நான் நீண்டநேர அளவிற்கு எனது முதுகு கீழே இருக்கும்படி படுத்திருக்க வேண்டியதாக இருந்தது - மற்றும் அது எவ்வித மாறுதலுமின்றி, எது முக்கியமானது மற்றும் எது முக்கியமற்றது என்பது பற்றிய எனது கண்ணோக்கிற்கு உதவிற்று.

சங்கீதக்காரர், சங்கீதம் 119ல் உடல்நலக்குறைவின் சாத்தியமான ஆசீர்வாதம் ஒன்றைக் குறிப்பிட்டார்: "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன்" (வசனம் 71). டென்னஸ்ஸே மாகாணத்தின் மர்ஃப்ரீஸ்பரோ என்ற இடத்தில், காசநோயினால் சாதாரண வாழ்வு பறிக்கப்பட்டு அநேக ஆண்டுகளாக உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்த கிறிஸ்தவ சகோதரர் ஒருவரைப் பற்றி நான் வாசித்தேன். அவர் வேதவசனங் களைப் படிப்பதிலும் வசனப்பகுதிகளை மனனம் செய்வதிலும் தமது நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தார். அவர் அந்த ஆண்டுகளை தமது வாழ்வின் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட காலமாக அதை நினைவுகூர்ந்து, "இந்த நோய் மாத்திரம் எனக்கு வராதிருந்தால் நான் கற்றுக்கொள்ள ஒருக்காலும் நேரம் எடுத்துக்கொண்டிராத பல வசனப்பகுதிகளை நான் மனனம் செய்திருந்தேன்" என்று கூறினார்.[10]

ஆவிக்குரிய பக்குவத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளுதல் போன்ற, உடல் நலக்குறைவின் மற்ற பயன்கள் குறிப்பிடப்பட முடியும். நீங்கள் அதிக மாக உபத்திரவப்படவில்லையென்றால், அனேகமாக நீங்கள் கர்த்தருக்குள் அதிகமாக வளரவில்லை என்று கூறப்பட்டுள்ளது (மற்றும் இது அடிக்கடி உண்மையாக உள்ளது). மேலும், நோயுற்றிருத்தல் என்பது, மற்றவர்கள் நாம் அனுபவித்துள்ளது போன்ற சிட்சைகளினூடே கடந்து செல்லுகையில் அவர்களைப் புரிந்துகொள்ளவும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் நம்மை அதிகமாய்த் தகுதிப்படுத்துகிறது.

நமது வாழ்வில் பேரழிவுகள் நடக்கும்போதும் நடைபெறும் எல்லாவற்றிலும் தேவனுடைய கரத்தைக் காணுவதில் நாம் இடர்ப்பாடு அடையும் போதும், "நன்மை" என்பதின் நமது விளக்கத்தை நாம் செயல் படுத்துதல் அவசியமாக இருக்கலாம். தேவன் அவரிடத்திற்கு நம்மை நெருங்கிச் சேர்ப்பதற்கு "எல்லா விஷயங்களையும்" - விரும்பத்தக்கதும் அல்லது விரும்பத்தகாததும் - நம்முடைய "நன்மைக்காக" ஒன்றாகச் செயல் படும்படி பயன்படுத்த முடியும்.

### நிபந்தனையுள்ள ஒரு கூற்று

நமது வேதபாட வசனப்பகுதியானது *நிபந்தனையுள்ள* கூற்றாக இருக்கிறது என்று குறிப்பிடாமல் நான் இந்த எடுத்துரைப்பை முடிக்க இயலாது. ரோமர் 8:28ன் வாக்குத்தத்தம் எல்லாருக்குமானதல்ல. அது "அவருடைய தீர்மா னத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு" மாத்திரம் உரியதாக உள்ளது.

*“தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள்” என்ற வார்த்தைகளை நான் வாசிக்கையில், “பிரதான கற்பனையில்” உள்ளபடி இயேசுவின் கூற்று எனது நினைவுக்கு வருகிறது: “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்புகூருவாயாக” (மத்தேயு 22:36, 37. யோவானின் வார்த்தைகளும் எனது நினைவுக்கு வருகின்றன: “நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல” (1 யோவான் 5:3; 2 யோவான் 6ஐக் காணவும்).*

*“அழைக்கப்பட்ட” என்ற வார்த்தை சுவிசேஷத்தின் அழைப்புக்குப் பதில் அளிப்பதைக் குறிக்கிறது (2 தெசலோனிக்கேயர் 2:14ஐக் காணவும்). இந்தத் தெய்வீக அழைப்பிற்கு மக்கள் விசுவாசத்தினால் பதில்செயல் செய்கையில், அவர்கள் ஞானஸ்நானம் பெறுகின்றனர் (நடபடிகள் 2:36-38) மற்றும் அவர்களைக் கர்த்தர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொள்கிறார் (நடபடிகள் 2:47; 1 கொரிந்தியர் 12:13ஐக் காணவும்). இவ்வாறு அவர்கள், தேவனால் “வெளியே அழைக்கப்பட்டவர்களின்” (ekklesia) பங்காகின்றனர்.*

*“அவருடைய தீர்மானத்தின்படி” என்ற வார்த்தைகளைக் காணத்தவறாதிருங்கள். எப்போதும், எப்போதும், தேவனுடைய தீர்மானங்களை நிறைவேற்றவும் தேவனுடைய சித்தத்தைச் செய்யவுமான விருப்பம் நமது சிந்தைகளிலும் இருதயங்களிலும் மிகமேலான இடத்தைக் கொண்டிருக்க வேண்டும். ரோமர் 8:28ல் பவுல் தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும் ஆசீர்வாதங்களிலும் நாம் உயரப்பறக்க நம்மை அனுமதித்தார், ஆனால் பின்பு அவர் நடைமுறைக் குறிப்புகள் சிலவற்றைக்கொண்டு நம்மைக் கீழே பூமிக்குக் கொண்டுவந்தார். நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள விரும்பினால், நமது வாழ்வை அவருக்குக் கீழ்ப்படுத்தப் போதுமான அளவுக்கு அவரில் நாம் அன்புகூர வேண்டும். சுவிசேஷத்தின் அழைப்பிற்கு நாம் விசுவாசத்தில் பதில்செயல் செய்து நமது சித்தத்தை அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்த வேண்டும்.*

## முடிவுரை

*ரோமர் 8:28, வேதாகமத்தில் எனக்குப் பிரியமான வசனப்பகுதியாக உள்ளது: “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” இவ்வசனம் கருத்துணர்வை ஏற்படுத்துகிறது - ஆனால் இது கர்த்தருக்குத் தங்கள் வாழ்வை ஒப்புக்கொடுத்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே கருத்துணர்வை ஏற்படுத்துவதாக உள்ளது. பின்வருவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: ரோமர் 8:28ன் வாக்குத்தத்தம் ஒவ்வொருவருக்குமானதல்ல; அது “அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு” மாத்திரம் உரியது. நீங்கள் செய்யும்படி தேவன் உங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதைச் செய்வதினால் நீங்கள் தேவன்மீதான உங்கள் அன்பைக் காண்பித்திருக்கிறீர்களா (யோவான் 14:15)? உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டு, மற்றும் ஞானஸ்நானத்தில் முழுக்காட்டப்பட்டு (யோவான் 3:16; லூக்கா 13:3; மத்தேயு 10:32; மாற்கு 16:16ஐக் காணவும்) உங்கள்*

*விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறீர்களா? நீங்கள் இந்த விஷயங்களைச் செய்திருந்தால், நீங்கள் கிறிஸ்தவராக வாழவேண்டிய பிரகாரம் வாழ்ந் திருக்கிறீர்களா - அல்லது மனம்வருந்துதல் மற்றும் ஜெபித்தல் மூலம் நீங்கள் அவரிடத்தில் திரும்ப வேண்டியிருக்கிறதா (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9; யாக்கோபு 5:16)? நீங்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு உங்கள் சித்தத்தைக் கீழ்ப்படுத்த மனவிருப்பமாக இருந்தால், ரோமர் 8:28ன் ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை இன்றே உரிமைகோர முடியும்!*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்துடன் நீங்கள், தேவனுடைய அருளிரக்கம் பற்றிய பாடல் ஒன்றைப் பயன்படுத்த விரும்பலாம்.*

*ரோமர் 8:28ன் மீதான வசனக் குறிப்புப் பிரசங்கத்திற்கு இன்னொரு கருத்து இங்கே தரப்படுகிறது: (1) தேவன் தாம் பயன்படுத்துகிற வல்லமை யொன்றைக் கொண்டிருக்கிறார் ("சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கத் தேவன் காரணமாகிறார்"); (2) தேவன் தாம் உதவுகிற மக்களைக் கொண்டிருக்கிறார் ("அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள்"); (3) தேவன் தாம் நிறைவேற்றுகிற நோக்கம் ஒன்றைக் கொண்டிருக்கிறார் ("அவருடைய தீர்மானத்தின்படி").*

---

குறிப்புகள்

[1]*ஒருபெரிய வசதியான, நன்கு மென்பஞ்சு இடப்பட்ட நாற்காலியொன்று, சிலவேளைகளில் "சாய்வு நாற்காலி" என்று அழைக்கப்படுகிறது.* [2]Adapted from Frank L. Cox, "My Easy Chair," *20th Century Christian* (May 1958): 17. [3]*ரோமர் 8:29ன் கலந்துரையாடல் தொடர்பாக, தேவனுடைய முன்னறிவு பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [4]*கிளே பிரையண்ட் என்பவர், ஆக்லஹாமாவின் மிட்வெஸ்ட் நகரப்பகுதி யிலுள்ள கிழக்குப்பகுதி கிறிஸ்துவின் சபையிலுள்ள பிரசங்கியார்களில் ஒருவராவார். இளையோருக்குப் பணிசெய்யும் ஊழியம் அவரது சிறப்புப் பகுதியாகும்.* [5]J. W. McGarvey, *McGarvey's Sermons* (Lexington, Ky.: N.p., 1893; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 1975), 215-46. *உங்கள் உரையைக் கேட்பவர்கள், எஸ்தர் மற்றும் யோசேப்பு ஆகியோருடைய வரலாற்றை அறியாதவர்களாக இருந்தால், தெய்வீக அருளிரக்கத்திற் கான வல்லமை நிறைந்த இந்த விவரிப்புகளை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [6]*தேவன் தமக்குச் சொந்தமானவர்களைப் பராமரிக்கிறார் என்பதற்குப் பல வசனப் பகுதிகள் உள்ளன. இங்கு ஒரு சில உதாரணங்கள் தரப்படுகின்றன: சங்கீதம் 3:3-6; 4:8; 5:11, 12; 17:7, 8; 23:1-4; 27:1; 28:7; 34:4, 7, 17, 19; 46:1; ஏசாயா 40:28-31; 41:10; மத்தேயு 10:29-31; 28:20; எபிரெயர் 13:5, 6. உங்களுக்கு மிகவும் அர்த்தம் நிறைந்தவையாக உள்ளவற்றைப் பயன்படுத்துங்கள்.* [7]Batsell Barrett Baxter, "Providence of God," transcript of sermon preached at the Hillsboro church of Christ, Nashville, Tennessee, 18 October 1959 (emphasis mine). [8]*பாவியானவர் மனந்திரும்பியபின்பு, கடந்தகாலப் பாவம்கூட நன்மையைக் கொண்டுவரும்படி தேவன் அதை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதற்கு வேத வசனங்கள் உதாரணம் தருகின்றன (லூக்கா 22:32ஐக் காணவும்). இருப்பினும் இது வேறொரு வேளையில் கலந்துரையாடலாக இருக்கக்கூடும்.* [9]Based on McGarvey, 245-46.

[10]Adapted from Batsell Barrett Baxter, *Great Preachers of Today: Sermons of Batsell Barrett Baxter* (Abilene, Tex.: Biblical Research Press, 1960), 154.